பட்டிருக்கிறார்; கள்ளத்தனமாய் மரங்கள் வெட்டி எடுத்துச் செல்வதைப் பரிசிலனை செய்யக் காட்டிலாகா ஊழியர்களுக்கு எச்சரிக்கை செய்யும்படி (வடக்கு) சேலம் ஜில்லாக் காட்டு அதிகாரிக்கு உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்போது புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி இந்த மரங்கள் எல்லாம் பஞ்சாயத்துக்கே உரிமை உள்ளவையாக ஆகிவிட்டன. ஏற்கெனவே உள்ள சட்டப் படி இவை ரெவின்யூ டிப்பார்ட்மெண்டுக்குச் சொந்தமானது. ஆகவே, புறம்போக்கு மரங்களை அல்லது சர்க்காருக்குச் சொந்த மான மரங்களை வெட்டுவதைத் தடுக்க பஞ்சாயத்துக்களுக்கு என்ன ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ள கிராமங்களைப் பொறுத்த கேள்வி இது. கனம் அங்கத் தினருடைய கேள்விக்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்தப் பகுதிகளில் எவ்வளவு டன் மரங்கள் இதுவரை இந்த மாதிரி வெட்டப்பட்டிருக்கின்றன என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எந்த அளவு என்ற தகவல் இல்லை, வெட்டப்பட்ட மரங்களின் உத்தேச மதிப்பு சற்றேறக்குறைய 12,000 ரூபாய்.

கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை

* 462 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை ஆகிய வைகள் அமைக்க அரசாங்கம் உதவித் தொகை அளித்து வரு கிறதா?

(இ) அப்படியானல் எவ்வளவு தொகை எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது?

(உ) அதேபோன்று ஆட்டுப் பண்ணை அமைக்க உதவும் உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN: (a) No.

(b) Does not arise.

(c) No.

திரு. முனு. ஆதி: இப்படிப்பட்ட பண்ணைகளை நடத்துவதற்குத் தனியார் முன் வந்தால் அவர்களுக்கு உதவி செய்வது பற்றி அரசினர் பரிசிலனை செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: சில இடங்களில் அவ்வாறு முன் வந்திருக் கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் ஒத்தாசை செய்கிறது.